R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
October 2021

## கெத்செமனே தோட்டம் வாருங்கள் ஜெபிப்போம்



ஒன்றுசேர்ப்போம்! ஒன்றுபடுவோம்!!

ஒரே ராஜ்யத்திற்காகப் பாடுபடுவோம்!!!

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

### Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God · love people · be a servant



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 | அக்டோபர் 2021 | கனி 11



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

**பாடம்** : 23
**தலைப்பு** : யோனா – Jonah
**வேத வாசிப்பு** : யோனா 1:1-10

1. கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு - யோனா 1:1,2
2. எபிரேயன் தேவனுக்கு பயந்து நடக்கிறவன் - யோனா 1:8-10
3. என்னை சமுத்திரத்திலே போட்டுவிடுங்கள் - யோனா 1:11-15

குடும்பமாக கர்த்தருடைய பணியைச் செய்ய ஒப்புக்கொடுக்கப் பட்டவர்கள் தேவை 6379350509

நீ தேவனை அதிகமாய் தேடும் போது அவர் அங்கே இருக்கிறார்
ஒருபோதும் அதை விட்டு விடாதே, ஒருபோதும் வீழ்ந்து போகாதே
ஒருபோதும் விசுவாசத்தை இழந்து விடாதே
தேவனை நம்பு, அவரால் கூடாதது ஒன்றுமில்லை - ஆமென்






God is there when you need Him most
Never give up, never back down,
Never lose faith
Trust God, He can do the impossible - Amen

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 254

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவர்களுடைய நாட்களில் இஸ்ரவேலர் எல்லாரும் பாடகருக்கும் வாசல் காவலாளருக்கும் அன்றாடகத் திட்டமாகிய பங்குகளைக் கொடுத்தார்கள்?
2. உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தை கொடுப்பது தேவனுக்கு எப்படியிருக்கிறது?
3. எஸ்தரின் மற்றொரு பெயர் என்ன?
4. நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்பட்டதா?
5. அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின் வாங்குவதில்லை என்ற தாசன் யார்?
6. நீயோ, எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு என யாருக்கு எழுதப்பட்டது?
7. அவர் (கர்த்தர்) பூலோகத்தை எதோடும், ஜனங்களை எதோடும் நியாந்தீர்ப்பார்?
8. இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசிக்கிறவர்கள் எக்குடும்பங்களைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்?
9. எவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி?
10. எங்கள் உடன்போர்ச்சேவகன் என பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்?

## வேதாகம ஆய்வு... 39

## எலியா
## Elijah

1. யெகோவா என் தேவன் என்று அர்த்தம்.
2. கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார் – 1இரா.17:22
3. எலியா சுழல் காற்றிலே பரலோகம் ஏறிப்போனான் – 2இரா.2:11
4. மோசேயும் எலியாவும் இயேசுவோடு – மத்.17:3
5. எலியா நம்மைப்போல பாடுள்ள மனுஷன் – யாக்.5:17



சிறுவர் பகுதி

## யோவான் ஸ்நானகன் - John the Baptist




குட்டீஸ், இன்றைக்கு வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டு புத்தகத்திலிருந்து ஒரு வயதான அதாவது தாத்தா பாட்டியை போலிருந்த ஒரு தம்பதியைப் பற்றி தெரிந்து கொள்ளப்போறோம். இவர்கள் பெயர் சகரியா எலிசபெத். சகரியா அந்நாட்களில் கர்த்தருடைய ஆலயத்தில் ஊழியஞ்செய்து வந்தாரு. இவங்களுக்கு குழந்தை இல்லை. ஒரு நாள் இவரு, தேவாலயத்தில் தூபம் காட்டிக் கொண்டிருந்த போது கர்த்தருடைய தூதன் ஒருவன் அங்கு வந்து நின்றாரு. பார்த்தீங்களா, சகரியாவுக்கு ஒரே பயம்! ஆனா, கர்த்தருடைய தூதன் சகரியாவைப் பார்த்து, ........பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக" என்று சொன்னாரு. அதுமட்டுமா, அந்த யோவான் தான் கர்த்தராகிய இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்துவாரு, அப்புறம் இந்த யோவான் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்குத் திருப்பி உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்துவாரு என்று சொல்லிவிட்டு போனாரு அந்த தூதன். கொஞ்சகாலம் கழித்து எலிசபெத் என்ற அந்த மூதாட்டிக்கு யோவான் பிறந்தாரு.

இவன் கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருப்பான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான் என்றெல்லாம் இவனைக் குறித்து சொல்லப்பட்டது. அதைப்போலவே இந்த யோவான் எல்லாரையும் பார்த்து மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினான். இவனிடத்தில் இயேசு ஆண்டவர் ஞானஸ்நானம் பெற வந்தபோது, இவன் நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டும், நீரோ என்னிடத்தில் வரலாமா என்றான். அவன் இயேசுவைப் பற்றி கூறும்போது, "....இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" எனக்குப் பின் வருகிறவர் இவர்தான், இவரைப் பின்பற்றுங்கள் இவர்தான் உலகமக்களுடைய பாவங்களை எல்லாம் நீக்குபவர் என்றெல்லாம் சொல்லி இயேசுவைப் பின்பற்றும்படி போதித்தான். பார்த்தீர்களா? இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்து இயேசுவைப் பின்பற்றுங்கள் என்று சொன்னவன். எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி! இவன் எங்கு தங்கியிருந்தான் என்ன சாப்பிட்டான் என்று தெரிந்தால், நீங்கள் ஆச்சரியப்படுவீங்க. இவன் வனாந்தரத்தில் தங்கிக் கொண்டு வெட்டுக்கிளியும் தேனும் சாப்பிட்டானாம். தன்னுடைய அப்பா அம்மா வயசான காலத்தில் அவர்களுக்கு மகனாக பிறந்தவன் இயேசுவுக்கு முன்பாக அவரைக்குறித்து மேன்மையாகப் பேசி ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றும் வழியை ஆயத்தப் படுத்தியிருக்கிறான்.

என்ன தம்பி, தங்காய் அன்று உலகத்தில் மனிதனாய் பிறந்த இயேசு, பின் மரித்து, உயிரோடெழுந்து தன் பிதாவினிடத்திற்கு போனாரல்லவா, இனி என்ன செய்யப்போறாரு தெரியுமா? தன்னுடைய பிதாவினிடத்திலிருந்து மறுபடியும் ஆகாயத்தில் வந்து நம்மையெல்லாம் தம்முடைய அழகான தேசத்திற்குக் கூட்டுகிட்டு போகப்போறாரு. அந்த இயேசு தான் மெய்யான தேவன் என்று நாம் விசுவாசிக்கிறோமல்லவா? நம்முடைய நண்பர்களுக்கும் வரப்போகிற இயேசுவைப் பற்றிச் சொல்லுவோமா? அந்த யோவானைப் போல இயேசுவை சந்திக்க நம் நண்பர்களை ஆயத்தப்படுத்துவோமா? இந்த யோவான் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தபடியால் இவன் யோவான் ஸ்நானகன் என்றும் அழைக்கப்பட்டான். நாமும் இவனைப் போலிருப்போம். கர்த்தர் உங்களோடிருப்பாராக! **O.K Bye!**







# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 21 அக்டோபர் - 2021 கனி - 11


ஆசிரியருரை

## இளவயதும் வாலிபமும் மாயையே
## Childhood and Youth are Vain



**வா**லிப வயது என்பது மிகவும் நல்ல வயது. அதிலே நல்ல முடிவெடுக்கிறவர்கள் மிகவும் சிறப்பான நிலைக்கு கொண்டுசெல்லப்படுவார்கள். இந்த வாலிப வயதை அநேக வாலிபர்கள் சரியாக பயன்படுத்துவதில்லை. தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டு அவைகளிலிருந்து விடுபடமுடியாமல் பாவத்தில் வீழ்ந்துபோய்விடுகின்றனர். பரிசுத்த வேதாகமம் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லுகிறது; "வாலிபனே! உன் இளைமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி" (பிர.11:9). கன்றுக்குட்டிகள் பிறந்தவுடன் சிறிது நேரத்தில் அங்கும் இங்கும் துள்ளிக்குதிக்கும். அதைப் பார்க்கும்போது நமக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும். அந்த குட்டிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். அதைப்போல வாலிப பருவமும் இருக்கும். ஆகையால் உன் இளைமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட என வேதம் அனுமதி கொடுக்கிறது. ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி என ஒரு எச்சரிப்பையும் கொடுக்கிறது. இந்த எச்சரிப்பு வாலிபர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள உதவும். பள்ளியிலும், வீட்டிலும், வேலைபார்க்ககூடிய இடங்களிலும் நம்மை சிலர் எச்சரிக்கின்றனர். அது நம்முடைய நன்மைக்காக இருக்கிறது. அதை நாம் ஏற்றுக்கொள்ளும்போது பாதுகாக்கப்படுகிறோம். தேவன் உலகத்திலே நாம் நடக்கவேண்டிய வழியை காண்பித்திருக்கிறார். உலகத்திலே நாம் எப்படிவேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் நாம் இப்படித்தான் நடக்கவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். அது நம்முடைய நன்மைக்காவே.

"ஒன்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" என பிரசங்கி 3:1-ல் வாசிக்கிறோம். அந்தப்படியாக வாலிபர்களுக்கும் ஒரு காலமிருக்கிறது. அந்த காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ள கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுங்கள். "நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை;

தீங்குநாட்கள்வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்," அவரை நினை என்று பிரசங்கி 12;1-ல் படிக்கிறோம். தேவனை நினைப்பதற்கும் அவருடைய கட்டளைகளின்படி செய்யவும் வாலிப வயது மிகவும் அருமையான வயது. அந்த வயதிலே உன் சிருஷ்டிகரை அதாவது உன்னை உண்டாக்கிய தேவனை நினை. வாலிப வயது சிந்தித்து நல்ல பல தீர்மானங்களை எடுக்கும் வயது. அந்த வயதில் உன்னை உண்டாக்கின தேவனைத் தேடு. அப்பொழுது நீ அவரைக் கண்டுகொள்வாய். உசியா என்ற யூத ராஜாவைக்குறித்து நாம் 2நாளா.26:5-ம் வசனத்தில் படிக்கிறோம்; "தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிறங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்". எத்தனையோ ராஜாக்கள் எழும்பினார்கள். அவர்களெல்லாம் குறைந்த வருடங்களே ராஜ்யபாரம் பண்ணினார்கள். ஆனால் தன்னுடைய பதினாறு வயதில் சிம்மாசனத்தில் உட்கார்ந்த உசியா 52 வருஷம் ராஜாவாயிருந்தான். இதற்கு காரணம் என்ன? அவன் தேவனைத் தேட மனதாயிருந்தான். ஆகையால் அவனுடைய காரியங்களை கர்த்தர் வாய்க்கச்செய்தார். நாம் முதலாவது தேவனைத்தேடும் போது நம்முடைய காரியங்கள் கர்த்தரால் வாய்க்கும். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் மீதியானியரிடம் தூக்கி விற்றுப்போட்டார்கள். அவனோ இளைமையானவன். அவன் தன் தேவனைப் பற்றிக்கொண்டிருந்தபடியால் கர்த்தர் அவனோடே கூட இருந்தார். அவனோடேகூட கர்த்தர் இருந்ததற்குக் காரணம் இருக்கிறது. அவன் பாவத்திற்கு விலகியிருந்தான். பாவத்தை வெறுத்தான். வாலிபத்தில் தன்னைக் காத்துக்கொண்டான். அவனுக்கு ஒரு சோதனைவந்தது; "இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்" (ஆதி.39:9). இருதயங்களைப் பார்க்கிற கர்த்தர் யோசேப்பின் இருதயத்தையும் அவன் பாவத்திற்கு விலகி தன்னை வாலிபப் பருவத்தில் காத்துக்கொண்டதையும் அறிந்தார். நீ உன் வாலிபப்பிராயத்தில் இந்த யோசேப்பைப் போலவும், உசியாவைப்போலவும் கர்த்தரைச் சார்ந்து இருப்பாயானால் உன் வாலிபநாட்களில் இவர்களைப்போல உயர்த்தப்படுவாய். தேவன் உன்னை எடுத்து அவருடைய ராஜ்யத்தின் பணியிலும் இன்னும் அவருக்குச் சித்தமானவைகளிலும் உன்னைப் பயன்படுத்துவார்.

**இரண்டாவது** வாலிபப்பிராயம் ஒரு மாயையான காலம். பிரசங்கி சொல்லுகிறார் 11:10-ல் "நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே". வாலிபத்திலே நாம் ஒன்றையும் சாதிக்கவில்லையே என்று வாலிபப்பிராயத்தில் அநேகர் கவலைகொள்ளுகின்றனர். இதனால் அவசரப்பட்டு தீங்கானகாரியங்களில் ஈடுபடுகின்றனர். வாலிபப்பிராயம் தடுமாற்றமான சிலகாரியங்களை கொண்டுவரும். இங்கே முற்பிதாக்களின் வார்த்தைகளைக் கவனிக்கவேண்டும். "என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகளை எப்பொழுதும் உன் இருதயத்திலே அணிந்து, அவைகளை உன் கழுத்திலே கட்டிக்கொள். நீ நடக்கும்போது அது



பலியுமாயிருக்கிறது எனக் கூறுகிறார். பிலிப்பியர் 4:17,18 ல் "உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குக் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" என்கிறார்.

சகோதரிகளாகிய நாம் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் அறிவுருத்தப்படுகிறோம். அன்றாடம் நான் இவைகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறேன், வழியில் ஆதரவற்றோரைக் கண்டால் அவர்களுக்கு பணமோ, பொருளோ கொடுத்து உதவுகிறேன் என்று சொல்லி அத்தோடு திருப்தியடைந்து விடுகிறோம். சில வேளைகளில் மற்றவர்களின் பார்வைக்காகக் கூட செய்வதுண்டு. ஆனால் இங்கே கூறும் போது சுவிசேஷமாகிய ஆவிக்குரிய நன்மையை விதைக்க சபையார் சேகரித்துக் கொடுத்த காணிக்கையைக் குறித்துப் பேசுகிறார். வெளித்தோற்றத்திற்காக நன்மை செய்கிற நாம் சுவிசேஷப் பணிக்கென்று நாம், செய்ய வேண்டிய பலவிதமான நன்மைகளையும், தானதர்மம் பண்ணுவதையும் மறந்துவிடுகிறோம். ஆனால் இதைச் செய்ய மறவாதிருங்கள் என்று வசனம் கூறுகிறது. "பரிசுத்தவான் களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோம.12:13). உங்கள் ஊழியர் வசதியானவர், அவருக்கு எல்லாம் இருக்குகிறதென்று எண்ணாதிருங்கள். அன்றைய நாளில் ஊழியன் எலியாவுக்குத் தன் வறுமையிலிருந்து அடையைப் பண்ணிக் கொடுத்த சாறிபாத் ஊர் விதவை தேசத்தின்மேல் மழை பெய்யும் நாள்வரைக்கும் குறைவில்லா ஆசீர்வாதத்தைப் பெற்றாள். அதைப்போல் தனக்கு இருந்த இரண்டு காசையும் காணிக்கைப் பெட்டியில் போட்ட ஏழை விதவை இயேசுவால் மெச்சிக்கொள்ளப்பட்டாள். இப்படியே ஆசீர்வாதங்களைப் பெற்ற பல ஸ்திரீகளைக் குறித்து சொல்லிக் கொண்டேபோகலாம். அன்பு சகோதரியே, இப்பேர்பட்ட பலிகளைச் செலுத்த மறவாதே. தேவன் அதின்மேல் பிரியமாயிருக்கிறார்.

♦ கடைசியாக, மேற்கூறிய எல்லா பலிகளைப் பார்க்கிலும் தேவனுக்குப் பிரியமான இன்னொரு பலி உண்டு. அது நம்முடைய சரீரங்களையே ஒப்புக்கொடுக்கும் பலியாகும். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று ரோமர் 12:1 ல் வாசிக்கிறோம். ஆம், நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போம். இதுவே புத்தியுள்ள ஆராதனை எனக்குறிப்பிடும்போது நாம் வீணான ஆராதனை செய்வது தேவனுக்கு பிரியமாயிருக்குமோ? சிந்திப்போம். ஆடுவதும், குதிப்பதும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் எனத் தொடர்ச்சியாகக் கூறுவதையும் தவிர்த்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேதவாக்கியங்களின்படி தேவனுக்குப் பிரியமான பலி செலுத்தி தேவனை மகிமைப்படுத்துவோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து அவர் சித்தம் செய்ய உதவிசெய்வாராக! ஆமென்.

சோதனைகள், வேதனைகள், கர்த்தர் நிமித்தம் வரும் பாடுகள் எல்லாவற்றிற்காகவும், எல்லாவற்றிலும், எப்போதும் தேவனுக்கு நன்றி செலுத்தி, இப்படியாக தேவனுடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை இயேசுவின் மூலமாக தேவனுக்குச் செலுத்தக்கடவோம். தாவீதும் கூட கர்த்தரைத் துதித்தான். எப்படியெல்லாம் துதித்தான்? நீதியின்படி துதித்தான் (சங்.7:17), முழு இருதயத்தோடும் துதிப்பேன் என்றான் (சங்.9:1). நாம் தேவனைத் துதிக்கிறோம் என்றால் அவருக்கு நன்றி செலுத்துகிறோம் (Giving Thanks). இந்த நன்றிபலியானது நீதியின்படியும், முழு இருதயத்தோடும் செலுத்தப்படக்கூடியதாக இருக்கிறது.

♦ எபேசியர் 5:19 ல் "சங்கீதங்களினாலும் (Psalams) கீர்த்தனைகளினாலும் (Hymns) ஞானப்பாட்டுகளினாலும் (Spiritual Song) ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம்பண்ணி .... தேவனை ஸ்தோத்திரித்து" என எழுதப்பட்டுள்ளது. சங்கீதம் என்பது ஸ்தோத்திரப்பாடல், கீர்த்தனை என்பது தேவனைத் துதிக்கும் பாடல் தொகுதி, ஞானப்பாட்டு என்பது ஆவிக்குரிய பாடல் என அகராதி குறிப்பிடுகிறது. "...சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி" (கொலோ.3:16) என எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் இவற்றையெல்லாம் நாம் செய்யும்போது நமது உதடுகளால் கர்த்தரைத் துதித்து, இருதயத்தில் அவருக்கு ஸ்தோத்திரபலியிடுகிறோம் என்று தானே அர்த்தம்! இவ்விதமாக தேவனைத் துதிப்போம். நம் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடித் துதிக்கும்போது அது தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலியாக இருக்கிறது. இன்றைய நாளில் சபைகளில் அல்லது ஜெபக்கூட்டங்களில் அநேகர், குறிப்பாக வாலிபப் பிள்ளைகள் பாட்டு பாடும் போது சப்தமாகவோ, பக்தியுடனோ பாடுவதற்கு வெட்கப்படுகின்றனர். இப்படிச் செய்வதில் தேவன் விருப்பம் கொள்வாரா என சிந்தியுங்கள்.

♦ நிலையான நகரத்தை எதிர்நோக்கியிருக்கிற நமக்கு "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1பேது.2:5) என பேதுரு குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அவரால் சேர்க்கப்பட்டுள்ள நாம் ஒருமனப்பட்டவர்களாகத் துதிக்க வேண்டுமெனவும் தேவன் விரும்புகிறார். ஏனெனில்; "நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு..." (ரோம.15:9) என்று எழுதப்பட்டுள்ளது. இவ்விதமாக நாமும் தேவனைத் துதிப்போம். இதில் தேவன் பிரியப்படுவார்.

♦ "அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபி.13:16) என்று வாசிக்கிறோம். தேவன் பிரியமாயிருக்கிற இவ்வகையான பலிகளை செலுத்துவதில் சோர்ந்துபோய்விடக்கூடாது. இதைக் குறித்து பவுல் கூறும்போது இது தேவனுக்குப் பிரியமான சுகந்தவாசனையும் உகந்த



உனக்கு வழிகாட்டும்; நீ படுக்கும்போது அது உன்னைக் காப்பாற்றும்; நீ விழிக்கும்போது அது உன்னோடே சம்பாஷிக்கும்" (நீதி.6:20-22). பொதுவாக வாலிபர்கள் தங்கள் பெற்றோருடைய ஆலோசனையைக் கேட்பதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. நீங்க ஒன்னும் எனக்கு ஆலோசனை சொல்லவேண்டாம் எனக்கு எல்லாம் தெரியும் என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுவார்கள். அன்பான வாலிப தம்பியே, தங்கையே உன் தகப்பனுடைய கட்டளையை காத்து, அதைப்போல உன் தாயின் போதகத்தைக் கேள். அவர்கள் உனக்கு நல்ல ஆலோசனையைக் கொடுப்பார்கள். உன் நண்பர்களுடைய ஆலோசனையைக் காட்டிலும் அது உனக்கு பிரயோஜனமாயிருக்கும். எந்த ஒரு தகப்பனும் தன் மகன் கெட்டுப்போகட்டும் என்று நினைக்கமாட்டான். அதைப்போல எந்த ஒரு தாயும் தன் மகன் எப்படியோ சீரழிஞ்சுபோகட்டும் என்று நினைக்கமாட்டாள். ஆகையால் அவர்களுக்குச் செவிகொடு. தேவன் நீ நன்றாயிருப்பதற்கு உனக்கு ஒரு பெற்றோரைக்கொடுத்திருக்கிறார். அது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. அவர்களுடைய போதகத்தை ஒரு போதும் தள்ளாதே. என்னுடைய தாயார் எனக்கு சொன்ன காரியம் ஞாபகத்திற்கு வருகிறது. நான் சாப்பிடும்போது இட்லிக்கு அதிகமான சட்டினியை ஊற்றி சாப்பிடுவேன். அப்பொழுது என்னுடைய தாயார் எப்பொழுதும் சட்டினியைத் தொட்டு சாப்பிட்டு பழகு என்று சொல்வார்கள். அதை சிலவேளைகளில் கைக்கொள்ளுவதில்லை. அதினால் நான் சாப்பிட்டுவிட்டு வயிற்றுபிரச்சனையால் அவதிப்படும்போது அவர்கள் சொன்ன போதனையை நினைத்துப்பார்ப்பேன். இதைப்போல எத்தனையோ நலமான காரியங்களை நமக்கு வாலிபப்பிராயத்தில் ஊட்டி வளர்க்கிறார்கள். ஆனால் அவைகளை நாம் கைக்கொள்ளாது போவோமானால் அநேக கஷ்டங்களை அநுபவிக்கநேரிடும்.

தன்னுடைய பெற்றோருடைய ஆலோசனையைக் கேட்டு தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறவன் ஞானத்தில் பிரியப்படுகிறவனாயிருக்கிறான்; அப்படிப்பட்டவன் "தன் தகப்பனை மகிழப்பண்ணுகிறான், வேசிகளோடே தொந்திப்பானவனோ ஆஸ்தியை அழிக்கிறான்" என நீதி.29:3-ல் வாசிக்கிறோம். நீங்கள் உங்களுடைய தகப்பனை பிரியப்படுத்த அவருக்குப் பிரியமானவைகளை செய்யுங்கள். புதிய ஏற்பாட்டில் தனக்கு வரும் பங்கை பிரித்துக்கேட்டு வாங்கிக்கொண்டு தூரதேசத்திற்குச் சென்று தன் ஆஸ்திகளை அழிந்துப்போட்ட இளையமகன் கடைசியில் மனங்கசந்து அழுது பரத்துக்குவிரோதமாகவும் உமக்குவிரோதமாகவும் பாவம் செய்தேன், உன்னுடைய மகன் என்று சொல்வதற்கும் அருகதையற்றவனாகிவிட்டேன் என்று சொல்லி தகப்பனிடம் வந்தான். அதைப்போல தகப்பனுடைய ஆலோசனையைத் தள்ளிப்போடுகிறவன் வேசிகளிடத்தில் தன் ஆஸ்தியை அழித்துப்போடுவான். புத்தியில்லாத ஒரு மூடனைக்குறித்து நாம் நீதி.7;21-27 வசனங்களில் படிக்கிறோம்; "தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப்பண்ணினாள். உடனே அவன் அவள் பின்னே சென்றான்; ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவதுபோலும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத்தீவிரிக்கிறதுபோலும், அவளுக்குப் பின்னே போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது. ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள். உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே. அவள் அநேகரைக் காயப்படுத்தி, விழப்பண்ணினாள்; பலவான்கள் அநேகரைக்

கொலைசெய்தாள். அவள் வீடு பாதாளத்துக்குப்போம் வழி, அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும்". இந்த வழியில் போகப்போகிறீர்களா? என் அன்பு தம்பியே, தங்கையே உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும். தேவன் உனக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். இந்த வானமும் பூமியும் நீ வாழும்படியாகவும், அநேக நன்மைகளை நீ கண்டடையும் படியாகவும், உன்னுடைய பெற்றோரை மகிழ்விக்கும்படியாகவும், உன்னாலே அநேகர் நன்மைகளை அடையும்படியாகவும் தேவன் உம்மைத் தெரிந்துகொள்ளும்படியாக இருக்கிறார். நீ அவரையும் அவருடைய கட்டளைகளையும் பற்றிக்கொள்ளு வாயானால் அவர் உன்னுடைய தேவனாக இருந்து உன்னை அற்புதமாக வழிநடத்துவார். மாயையான இந்த இளமையிலும் உன் வாலிபத்திலும் உன் சிருஷ்டிகரை நினை. அப்போஸ்தலனாகிய பவுல் தான் ஊழியத்திலே கண்டு கொண்ட தீமோத்தேயு என்ற வாலிப உத்தம சகோதரனுக்கு எழுதும்போது; "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு" என ஆலோசனை சொல்லி எழுதுகிறார் (1தீமோ.6:20). ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு ஆலோசனை சொல்லுவதைப்போல எழுதுகிறார். இவனை சுவிசேஷத்தினாலே பவுல் பெற்றெடுத்தார் என்று சொல்லலாம். அதை தீமோத்தேயு அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு உலகத்திலே தோன்றியிருக்கிற கள்ள உபதேசங்களுக்கும், வீண்பேச்சுக்கும் தன்னை விலக்கிக் காத்துக் கொண்டான். நீங்களும் உங்களுடைய வாலிபப்பிராயத்திலே உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**வாலிபத்திலே தன்னைப் பாதுகாத்துக்கொண்டு எதை அடையும்படியாக நாடவேண்டும்?**

பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு நல்ல ஆலோசனையைக் கொடுக்கிறார். என்னவென்றால்; "நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு" (1தீமோ.6:1). இன்றைய வாலிபர்கள் எதை எதையோ நாடிக்கொண்டும் தேடிக்கொண்டும் இருக்கிறார்கள். மாயையான இந்த வாலிபப்பிராயத்தில் ஜீவிக்கிற நீங்கள் மேற்கண்டவைகளை நாடுங்கள். அது உங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தும். நீதியும் தேவபக்தியும் உங்களிடம் இருந்தால், உங்களோடு தேவன் இருப்பார். அநேகர் உங்களோடு பழகவிரும்பு வார்கள். உங்களுடைய நீதியையும் பக்தியையும் பார்த்து உங்கள் மீது நம்பிக்கை வைப்பார்கள். மேலும் விசுவாசமும் அன்பும் பொறுமையும் சாந்தகுணமும் இருக்கும்போது உலக ஆசீர்வாதங்கள் அனைத்தும் உங்களைத்தேடி வரும். அதில் எந்த வித சந்தேகமும் இல்லை. வாழ்க்கையின் அஸ்திபாரமே விசுவாசம் தான், அந்த விசுவாசம் உங்களில் காணப்படும்போது அநேகருக்கு உங்கள் மேல் நம்பிக்கை ஏற்படும். அன்பும், பொறுமையும், தெய்வீக குணங்கள். இவைகளை மனிதர்களிடம் பார்ப்பது அரிதாக இருக்கிறது. அது உங்களிடம் இருக்கும்போது தேவன் உங்களோடு இருக்கிறார் என்று அநேகர் உங்களிடத்தில் ஆலோசனை கேட்க வருவார்கள். எல்லாவற்றிற்கு மேலாக சாந்தகுணத்தை உடையவர்களாக இருக்க முயற்சியுங்கள். இவைகள் உங்களிலிருக்கும்போது கர்த்தர் உங்களோடு இருப்பார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.





## தேவனுக்கு ஸ்தோத்திரபலி செலுத்துங்கள்

**Offer Sacrifice of Praise to God**

*-Glory Arjunan*



அன்பான சகோதரிகளே, பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவ ஜனங்கள் தேவனுக்கு பல விதமான பலிகளைச் செலுத்தி வந்தார்கள். இன்றைய நாளில் கிறிஸ்தவர்களாகிய நாம் செலுத்த வேண்டி பலிகள் எவையென்றும் எவ்விதமான பலிகளில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்பதைப் பற்றியும் வேதவசனங்களின் அடிப்படையில் ஆராய்வோம்.

"நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத் திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி.13:14,15) என வாசிக்கிறோம். கிறிஸ்தவ வட்டாரங்களில் 'ஸ்தோத்திர பலி, என்றவுடன் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் எனத் தொடர்ச்சியாக உதடு மூலம் கூறிக்கொண்டேயிருப்பதுதான் தேவனுக்குச் செலுத்தும் ஸ்தோத்திரபலி என நினைக்கின்றனர். நாம் வேதவசனங்களை வாசிக்கும்போது அவைகள் எதற்காக எச்சூழலில் எழுதப்பட்டுள்ளது என்றும் அந்த வசனங்களோடு தொடர்புடைய மற்ற இணை வசனங்களையும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

♦ இங்கே கூறப்பட்டுள்ள ஸ்தோத்திரபலி 'அவருடைய நாமத்தைத் துதிக்கும்' உதடுகளின் கனி ஆகும். இதை ஆங்கில வேதாகமத்தில் வாசிக்கும் போது, `Give thanks to His Name the friuts of the lips' எனவும் வாசிக்கிறோம். மேலும **'எப்போதும்'** தேவனுக்குச் செலுத்தக்கடவோம் எனவும் வாசிக்கிறோம். எப்போதும் என்றால் (Continually, always, in everything) அடிக்கடி, எல்லாவற்றிலும் எனப் பொருள்படுகிறது. சிலர் 'இடைவிடாமல்' ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும் என்பர். நல்லது தான். இதைக்குறித்து நாம் வாசிக்கும்போது "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" (Pray without ceasing) என்று தான் (1தெச.5:17) எழுதப்பட்டுள்ளது. Continually என்ற ஆங்கில சொல்லுக்கும் Without Ceasing என்ற சொற்களுக்கும் பொருள் வேறுபடுகிறது. Praise to God Continually என்பதற்கு அடிக்கடி தேவனுக்குத் துதிசெலுத்துங்கள் எனப்பொருள் எனவே எப்போதும் தேவனைத் துதிப்போம், மேலும் எபேசியர்5:20ல் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து..." என வாசிக்கிறோம். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.5:18) என்றும் வாசிக்கிறோம். எப்பொழுதும் எல்லாவற்றிலும், எல்லாவற்றிற்காகவும் நாம் தேவனுக்குத் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். இது நம்மை குறித்து தேவனுடைய சித்தமாகவுமிருக்கிறது. இங்கே யோபுவை நினைத்துப் பாருங்கள். யோவுக்கு இருந்த (மனைவியைத் தவிர) அனைத்தும் பறிபோனது எல்லாவற்றையும் இழந்தபோதிலும் அவன் "...கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21) என்றான். நாமும் கூட நமக்கு வரும் ஆசீர்வாதங்கள், நன்மைகளுக்காக மட்டுமல்லாது, நமக்கு நேரிடும் தீமைகள்

எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது"(2தீமோ.3:16,17).

**ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலனைப் பெற்றுக் கொள்ள:** "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்,18:20). எபிரெயர்10:24ன்படி நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களாயிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப்போமானால், நாம் எவ்வாறு சகோதரரை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையைத் தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என வெகு காலத்திற்கு முன்னமே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினாவைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகின்றான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கியிருப்பீர்களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். ஆராதனைக்குச் செல்லுவது சிரமமாயிருக்குமானால், இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவு பெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறை வேற்றப்பட்டதாயிருக்கிறது.




**மாத இதழுக்கான**
**சந்தா செலுத்த இரு வழிகள்**

**The Word of Christ**
**Canara Bank A/c No.0946201000552**
**IFSC:CNRB0000946**


**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**




## கர்த்தருடைய இராப்போஜனத்தின் துவக்கம்

The Institution of the Lord`s Supper

*-J.C.Choate*



கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பே, கர்த்தர் தம்முடைய நினைவு கூருதலாகிய இராப்போஜனத்தைத் துவக்கினார். கர்த்தருடைய ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த போது சங்காரகாரன் அவர்களை சங்கரிக்காமல் கடந்துபோன நாளை நினைவு கூரும்படி வருடத்திற்கு ஒரு முறை பஸ்கா பண்டிகையை அநுஷ்டித்து வந்தார்கள். பஸ்காபண்டிகைக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்குப் பயணம் செய்தனர். இயேசு உலகமெங்குமுள்ள தம்முடைய ஜனங்களால் தம்முடைய சரீரம் மற்றும் தம்முடைய இரத்தபலியின் நினைவாக வாரந்தோறும் நினைவு போஜனமாக மாறப்போகிற தம்முடைய இராப்போஜனப் பந்தியை ஆரம்பிக்க இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப்பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"(மத்.26:26-29).

அந்த சமயத்தில் கர்த்தர் இன்னும் சிலுவையில் மரிக்கவில்லை என்பதை தயவுசெய்து கவனியுங்கள், ஆனால் அவர் தம்முடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தம்மை நினைவு கூருவதை அநுஷ்டிக்கும்படிக்கு இதை ஆரம்பித்தார். அத்தோடு கூட அவர் தாம் அவர்களோடேகூட தம்முடைய பிதாவின் ராஜ்யத்திலே பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்றும் குறிப்பிட்டார். அந்த ராஜ்யம் அல்லது சபை இன்னும் வராதிருந்தது, ஆனால் அது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வருவதாக இருந்தது. அப்போஸ்தலர் 2ல் குறிப்பிட்டுள்ளபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, சீஷர்கள் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டு அந்த நாளை தொடர்ந்து அநுஷ்டித்து வருகிறபோது அவர் தம்முடைய ஜனங்களோடு இருப்பார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, "ஜீவ அப்பம் நானே . உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக

நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்:இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும்,என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்” (யோவா.6:48-58).

தொடர்ந்து கூறும் கூற்று முழுவதிலும் இயேசு தம்முடைய வெளிப்படையான சரீரத்தைப்புசிப்பது குறித்தும் தம்முடைய வெளிப்படையான இரத்தத்தை பானம்பண்ணுவது குறித்தும் பேசிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிக்குரிய காரியங்களை, அதாவது தம்முடைய சரீரத்திற்கு நினைவாக பிட்கப்படுகிற அப்பத்தைக் குறித்தும் தம்முடைய இரத்தினாலாகிய பாத்திரத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார். சிலர் இன்று அப்பத்தில் பங்கு கொள்ளும் போது, அது இயேசுவினுடைய வெளிப்படையான மாம்சமாக மாறுகிறது என்றும், பாத்திரத்தில் அல்லது திராட்சரசத்தில் பங்கு கொள்ளும் போது அது இயேசுவின் உண்மையான இரத்தமாக மாறுகிறது என்றும் விசுவாசிக்கின்றனர். நிச்சயமாகவே இது உண்மையல்ல. இயேசு தம்முடைய ஜனங்கள் மாம்சத்தைத் தின்னும் பழக்கத்தில் ஈடுபடும்படி தம்முடைய இராப்போஜனத்தைப் பயன்படுத்தமாட்டார்.

இப்போது கிறிஸ்து சிலுவையில் மரித்தவராக, அடக்கம் செய்யப்பட்டவராக மேலும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார் மற்றும் இராஜ்யம் அல்லது சபையானது அவர் திட்டமிட்டபடி ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களாகிய, அவருடைய குடும்பமாகிய, சபை அங்கத்தினராகிய, நாம் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறவர்களாகயிருக்கிறோம். பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்திலே அப்பம் பிட்கும்படி கூடிவந்திருந்த நிகழ்ச்சியை நாம் மாதிரியாகக் கொண்டிருக்கிறோம். வேதம், “வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்” (அப்.20:7) எனக் கூறுகிறது. வேதாகம பண்டிதர்கள் “அப்பம் பிட்குதல்” என்ற வார்த்தைகளை,



“வாருங்கள் என்னைப்பின்பற்றுங்கள்” என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக் கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33ல் அவர் “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” என்றார்.

நாம் எவ்விதமான “சிரமம்” அல்லது ‘அசௌரியம்’ அல்லது “செலவு” போன்றவை அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு அவசியமானது என அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, “சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்” என விளக்குகிறது.

“சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்”.

“மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்”

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

**தேவனை ஆராதிக்க:** எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது, “நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்,பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்”.

**கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர:** அப்போஸ்தலர்20:7ல், பவுல் சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது; “வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்”.

**கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள:** “....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வானாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதை யாயிரு” (2தீமோ.2:15). ஏன்? ஏனென்றால், “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,

பெண்கள் பகுதி

# ஆராதனைக்கு செல்வது மிகச்சிரமமாயிருக்கிறது
# Going To Worship Is Too Much Trouble

*-Betty*



ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் - சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ்,அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம். ஆனால் ஒருவருடைய வேலை ஸ்தலத்திற்கு செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டுமென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தமக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் - நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடிவந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத்திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், "நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்" எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். "ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளை செய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஓய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது" என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள் தாங்கள் ஆஜராகாத காரணத்திற்கு "பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது"எனக்கூறி சபை ஊழியரை குற்றப்படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை- நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையா? அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில் கலந்துகொள்ளுவோம், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது? தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி



வாரந்தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி சபை அநுஷ்டிக்கிறவற்றோடு ஒப்பிட்டு அங்கிகரித்துக் கொள்கின்றனர். கிறிஸ்து இராப்போஜனத்தைத் துவக்கினபோது, தம்மை நினைவுகூரும்படி தம்முடைய சீஷர்கள் இனி வரக்கூடிய நாட்களில் கூடிவரும்போது அவர்கள் மத்தியில் அவர் இருப்பார் என்று அவர் கூறியதையும் நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இன்னொரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று பேராவது தம்முடைய நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருப்பார் எனச் சொன்னார் (மத்.18:20).

பவுல் கிறிஸ்தவர்கள் கூடிவந்திருந்த இடத்தில் வாரத்தின் முதல்நாளில் கலந்து கொண்டார் என்பதையும் தயவுசெய்து கவனியுங்கள். வாரத்தின் எந்த முதல் நாள்? ஒவ்வொருவாரத்தின் முதல் நாளில் கூடினார்கள்,மேலும் உடனுக்குடன் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படியாகவும் கிறிஸ்துவின் இராப்போஜனபந்தியை நினைவு கூரும்படியாகவும் கூடிவந்தார்கள். பழைய ஏற்பாட்டின் கீழ் தேவனுடைய ஜனங்கள் ஏழாம்நாளை நினைவுகூரும்படி கட்டளை பெற்றிருந்தனர், ஆனால் எந்த ஏழாம் நாள்? ஒவ்வொரு ஏழாம் நாள். அந்தப்படியே கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் பங்குகொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் 1கொரிந்தியர் 11 -ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்களில் சிலர் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தை அசட்டை பண்ணினார்கள் என்பது குறித்து பேசுகிறார். அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை சாதாரணமான தங்களுடைய சொந்த போஜனத்திற்கு மாற்றினார்கள். இது தவறானது. பவுல் அவர்களுக்கு அவர்களுடைய சொந்த போஜனத்தைப் புசிக்க அவர்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஆராதிக்கக்கூடி வரும்போது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் நினைவுகூருதலாக அப்பம் பிட்கும்படிக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணும்படிக்கும் கூடிவரவேண்டும், தங்களுடைய வயிறுகளை நிரப்ப சொந்த போஜனத்தைப் புசிக்க அல்ல என்று சொன்னார்.

மேலும், பவுல் "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்

பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்'' (1கொரி.11:23-29) என தொடர்ந்து கூறினார்.

கொரிந்து சபை கிறிஸ்தவர்கள் இவ்வாறாக நினைவுறுத்தப் பட்டார்கள், நாமும் அவ்விதமாக, கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் பங்கெடுக்கும் போது நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவனாக இருந்தால், அவன் தேவனிடத்தில் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டியது அவசியம். பாவம் வெளிப்படையாக இருக்குமானால் அவன் சபையாருக்கு முன்பாக, மனந்திரும்புதலை வெளிப்படுத்தும்படிக்கும், தன்னுடைய குற்றங்களை அறிக்கையிடும்படிக்கும், தன்னுடைய சகோதரரிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதற்கும் செல்ல வேண்டியது அவசியம். விசுவாசமுள்ளவராக, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பியவராக, மன்னிப்புக்கேட்டவராக இருக்கிறவர்கள் இராபோஜனத்தில் பங்குகொள்ள பாத்திரவான்களாக இருக்கிறார்கள். ஒருவன் தன்னை சோதித்தறிந்து, தன்னை சரிசெய்து கொள்ளாமல் இருந்தால், அவன் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமைக் குறைச்சலை கொண்டு வருகிறவனாகவும் தன்னை தண்டனைக்கு உட்படுத்துகிறவனாகவுமிருக்கிறான்.

நீங்கள். கிறிஸ்தவர்களா, கிறிஸ்துவின் சபை அங்கத்தினரா? அப்படியிருப்பீர்களென்றால், பின்பு ஆராதிக்கும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு, அவர் உனக்காகவும் உன்னுடைய இரட்சிப்பிற்காகவும் அவரையும் அவர் செய்து முடித்தவற்றையும் நினைவுகூரும் நோக்கத்திற்காக அசட்டைசெய்யாதபடி மிகுந்த பயத்தோடு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடி வரவேண்டும். இந்த வழிபாடு கர்த்தருக்குக் கனத்தையும் மகிமையையும் கொண்டுவருகிறது. மேலும் அவரிடத்தில் கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படிக்கு உங்களுக்கு பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

## நான் யார்?



- யாக்கோபு என் சகோதரன்.
- ஒரு நிருபத்தை எழுதினேன்.
- பிரதான தூதன் மிகாவேல் பற்றி எழுதியுள்ளேன்.
- ஏனோக்கைப் பற்றி எழுதியுள்ளேன்.
- தங்களைத் தாங்களே மேய்க்கிறவர்களைப் பற்றியும் எழுதியுள்ளேன்.
- நான் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்.
- புதியஏற்பாட்டில் கடைசி புத்தகத்திற்கு முந்தின புத்தகம் என்னால் எழுதப்பட்டது.



சபையில் இருக்கிற மூப்பர்களுக்கு, ஒரு சிறிய பிராந்திய சபையில் இருக்கிற மூப்பர்களைப் பார்க்கிலும் பெரிதான வல்லமை, அதிகாரம் எதுவும் இல்லை. அப்போஸ்தலனாகிய பேதுரு மற்ற மூப்பகளிடத்தில் பேசும் போது தன்னை ஒரு உடன் மூப்பன் என்று அழைக்கிறார் (1பேது.5:1). மூப்பர்கள் தங்களை பெருமையுடனே உயர்த்திக்கொள்வதற்கும், பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழுந்து விடுவதற்கும் எதிராக எச்சரிக்கப்படுகிறார்கள் (1தீமோ.3:6). பிசாசானவன் ஒரு மூப்பரை பெருமையுள்ளவராக ஆக்குவதிலே மகிழ்ச்சியடைகிறான். மனுஷ பெருமை எந்த ஒரு வழிநடத்துகிறவரையும் எளிதாக கெடுத்துப்போடுகிறது. ஒரு சபையிலிருக்கிற எல்லா மூப்பர்களும் சமமான அதிகாரம் உடையவர்களாக இருக்கிறார்கள். மற்றொருவரையும் விட ஒருவருக்கும் பெரிதான அதிகாரம் எதுவும் இல்லை.

**கேள்விகள்**

1. ஆறு பெயர்களும் எத்தனை அலுவர்களை குறிப்பிடுகின்றன? ----------
2. ஆறு பெயர்களும் உண்மையிலேயே ஒவ்வொன்றுக்கும் ------- பெயர்கள் கொண்ட ---------- குழுக்களாக இருக்கின்றன.
3. பெயர்கள் ஒன்றாக இணைக்கிற இரண்டு வேதாகம அதிகாரங்களை பெயரிடவும்.
4. ஒவ்வொரு --------, ------------- மூப்பர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள் என்று அப்.14:23 சொல்கிறது.
5. தீத்து 1:5 சொல்கிறது -------------- தோறும் ----------- ஏற்படுத்தப்பட்டார்கள் என்று.
6. பிலி.1:1 வசனத்தில் பிலிப்பிய பட்டணத்திலிருந்த ---------- பவுல் எழுதினார்.
7. எப்பொழுதாகிலும் ஒரு மனிதர் மட்டுமே ஒரே மூப்பராக செயல்பட முடியுமா? ---------.
8. 1பேது.2:25 கிறிஸ்துவை உங்கள் ஆத்துமாக்களுக்கு ----------- ம் ------- ஆனவர் என்று அழைக்கிறது.
9. வேதாகமம் எப்பொழுதுமே ஒரு சபைக்கு "ஒரே கண்காணி" என்று பேசுகிறதா? -----------
10. 1தீமோ.3:6 தங்களை ------------- உயர்த்திக் கொள்வதற்கு எதிராக பேசுகிறது.




- அக்டோபர் மாதத்தை காணசெய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி...
- உலக சமாதானத்திற்காக...
- மனிதநேயம் தொடர்ந்து காக்கப்பட...
- மாத இதழின் வாசகர் குடும்பங்களுக்காக...
- ஒவ்வொரு நாளும் தேசங்கள் சந்திக்கும் இயற்கை பேரிடருக்
- நாட்டை பாதுகாக்கும் ராணுவவீரர்களுக்காக...
- தேசத்தை ஆளும் தலைவர்களுக்காக...

**தெரிந்து கொள்ளுவோம்** கோலாலம்பூர் (மலேசியா)

**1857–ம் ஆண்டில் வெள்ளீயம் வெட்டி எடுக்கும் இடமாக உருவானது மலாய் மொழியில் 'கழிமுகக் களிமண்' என்பது இதன் பொருளாகும்.**

**இன்று மலேசியா எப்படியிருக்கிறது? வளர்ச்சிபாதையில் உலகம்.** *- K.R.K.Ravi Asir*

**2. எப்பொழுதுமே ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள்.**

நாமகரண சபைகளில் அடிக்கடி செய்யப்படுகிற தவறு என்ன வென்றால்; ஒரு சபைக்கு மேலாக ஒரு "பாஸ்டர்" (ஆயர்) அல்லது "பிஷப்" (கண்காணி என்பதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டு சபைகளில் எப்பொழுதுமே ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயர்கள் (அல்லது மூப்பர்கள்) இருந்தார்கள். எப்பொழுதுமே நாம் ஒருசபைக்கான "ஒரே ஆயர்" என்று வேதாகமத்தில் வாசிக்கிறதில்லை. அதற்கு பதிலாக ஒவ்வொரு சபையிலும், மூப்பர்கள் ஏற்படுத்தப்பட்டர்கள் என்று வேதாகமம் சொல்கிறது (அப்.14:23) பட்டணங்கள் தோறும் மூப்பர்கள் (ஒரு மூப்பர் அல்ல) ஏற்படுத்தப்பட்டார்கள் (தீத்து 1:5). பவுல் எபேசு சபையிலிருந்து மூப்பர்கள் அல்லது "கண்காணிகளை" வரவழைத்தார் (அப்.20:17,28). அவர் பிலிப்பி பட்டணத்திலிருந்த "கண்காணிகளுக்கு" எழுதினார் (பிலி.1:1). இது சபையின் ஆளுகைக்கான கிறிஸ்துவின் திட்டமாக இருக்கிறது. இந்த திட்டத்திலே மாபெரும் ஞானம் அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு பிராந்திய சபையையும் ஒரு தனி மனிதன் ஆளுகை செய்வாரேயாகில், அவர் தன்னைக்குறித்து அந்த சபைக்கு "தலைமையானவர்" ஆக எண்ணக்கூடும். அவர் தனக்காக முக்கியத்துவத்தை தேடும்படியாக சோதிக்கப்படுவார். அவர் தன்னுடைய முடிவுகளில் மறறவர்களைக் குறித்து சிந்திக்க வேண்டியதாய் இருக்காது. அவரே முழுமையான ஆளுகை செய்கிறவராக இருப்பார். கிறிஸ்துவின் திட்டமானது ஒரு வழிநடத்துகிறவரை ஒருவர் தன்னை "பெரிய மனிதனாக" ஆக்கிக் கொள்ள அனுமதிக்கிறதில்லை. ஒவ்வொரு பிராந்திய சபையையும் ஆளுகை செய்யும்படி மூப்பர்கள் குழு ஒன்றை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே வேதாகமத்தின் திட்டமாக இருக்கிறது. ஒரு சபையிலே குறைந்த பட்சம் இரண்டு தகுதி வாய்ந்த மனுஷர்கள் காண்பபடாதவரையில் அந்த சபையானது மூப்பர்கள் ஏற்படுத்தப்படும்வரை காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது. சபையின் அமைப்பில் ஒருவர் மாத்திரமே இருப்பாரேயாகில் அது வேதவாக்கியங்களின்படியானதாக இரண்டு மூப்பர்களில் ஒருவர் மரணம் அடைவாரேயாகில் அல்லது தன் தகுதியை இழப்பாரேயாகில், இருக்கின்ற மூப்பரானவர் மற்றொருவர் மூப்பருக்கான தகுதியை அடையும்வரை தன்னுடைய மூப்பர் பதவியை கட்டாயம் ராஜினாமா செய்துவிடவேண்டும். ஒவ்வொரு பிராந்திய சபையிலும் அவசியம் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருக்க வேண்டும்.

**3. ஒரு சபையிலிருக்கிற எல்லா மூப்பர்களுக்கும் சமமான அதிகாரம்:** அடிக்கடி செய்யப்படுகிற மூன்றாவது தவறு என்னவென்றால்; ஒரு மூப்பர் தன்னை மற்றவர்களைப்பார்க்கிலும் உயர்வாக எண்ணிக் கொள்ளுதல். சபையின் ஆளுகையில் ஆரம்ப காலங்களில் சபையில் இருந்து முதலாவதாக விலகிச் செல்கிச் சென்ற காரியங்களில் ஒன்றாக இருந்தது. பின் நாட்களில் ரோமன் கத்தோலிக்க கருத்தாகிய அநேகம் சபைகளுக்கு மேலாக "கண்காணிகள்" (பிஷப்கள்) என்ற கருத்துக்கு வழி நடத்தியது. 1பேது.5:4 கிறிஸ்துவை குறித்து "பிரதான மேய்ப்பர்" என்று பேசுகிறது. வேதாகமம் எந்த சாதாரண மேய்ப்பரையும் "பிரதானமேய்ப்பர்" என்று அழைக்கப்படுகிறதில்லை, ஏனெனில் அவர் ஒருவரே பிரதான மேய்ப்பர் என்று நாம் விசுவாசிக்கும்படியாக வழிநடத்தப்படுகிறோம். 1பேது.2:25 கிறிஸ்துவை "உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும், கண்காணியுமானவர்" என்று அழைக்கிறது. ஒருபோதும் நாம் எந்த மனுஷனையும் ஒரு சபைக்கு அவரே "கண்காணி" என்றோ அல்லது பல சபைகள் சேர்ந்த ஒரு குழுவிற்கு கண்காணி என்றோ நாம் வாசிக்கிறதில்லை. ஒவ்வொரு பிராந்தியசபையும் "மேற்பார்வையாளர்களை உடையதாயிருக்கிறது, "ஒரு மேற்பார்வையாளரை" அல்லது "ஒரு ஆயரை" உடையதாக அல்ல. இன்னும் மேலாக பல ஆண்டுகளாக பணியாற்றிய மூப்பராக இருந்தாலும், பெரிதான வல்லமை எதுவும் இல்லை. ஒரு பெரிய பிராந்திய



# வாசகர் கடிதங்கள்...




கர்த்தரின் பணியில் அய்யா, அம்மா அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் தோத்திரம். அய்யா எனது விருப்பத்தின்படி 'மகிழ்ந்து களிகூரு' என்ற புத்தகம் ஒன்று அனுப்பி உதவினீர்கள். 27.08.2021 கிடைத்தது. நன்றி. ஐயா அறிமுகவுரையும் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஐந்து கேள்விகளும் மிகவும் அருமை கருத்தோடு ஜெபத்துடன் படித்து வருகிறேன். இதுபோன்ற பெண்களுக்கான ஆவிக்குரிய புத்தகங்கள் எங்களிடம் இருக்கிறது எழுதிபெற்றக்கொள்ளுங்கள் என்ற செய்தி நற்செய்தி. சில புத்தகங்கள் அனுப்பி உதவினால் சபை பெண்களுக்கு உதவியாயிருக்கும். நன்றி.

இப்படிக்கு,
E.அதிசயம். விருதுநகர் மாவட்டம்

---

இயேசுவின் நாமத்தில் சகோதரி குளோரி அர்ஜூனன் அவர்கள் அன்போடு அனுப்பிய 'மகிழ்ந்து களிகூரு' புத்தகம் கிடைத்தது நன்றி!

ஆசிரியர்கள் அறிவுக்கண்ணைத் திறப்பவர்கள். அந்தப் பணியிலிருந்து கிறிஸ்துவுக்கு பணியாற்ற தன்னை இணைத்துக்கொண்ட சகோதரிக்கு அன்பின் வாழ்த்துக்கள். அன்பு சகோதரியே தாங்கள் சகோதரர் அர்ஜூனன் உடன் சேர்ந்து இயேசுவுக்கு செய்யும் ஊழியத்தை தேர்ந்தெடுத்திருப்பது நல்லபங்கை தெரிந்துகொண்டீர்கள். என் பக்கத்து வீட்டில் ஸ்ரீலங்கா கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். எனக்கு வரும் தங்கள் இதழ்களை அவர்களுக்குக் கொடுப்பேன். சகோதரர் அர்ஜூனன் சகோதரி குளோரி அர்ஜூனன் எனக்கு நல்ல வழிகாட்டிகள். தங்கள் ஊழியம் சிறப்பாக அமையவும், தொடர்ந்து ஊழியத்தில் நிலைபெறவும் எல்லாம் வல்ல இறைவன் இயேசு ஆசீர்வதிப்பார்.

இப்படிக்கு,
K.S.மாணிக்கவாசகம். திருச்சி மாவட்டம்

**நடப்புச் செய்திகள்**

❒ 2 மாடிக்குமேல் கட்டடம் கட்டினால் 'லிஃப்ட்' கட்டாயம். அரசு அதிரடி உத்தரவு!

❒ ஜூலை 1-ந் தேதி முதல் அங்கீகரிக்கப்பட்ட வாசன ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெறும் ஓட்டுநர்கள் ஆர்.டி.ஓ.அலுவசத்தில் நடத்தப்படும் வாகன ஓட்டும் தேர்வில் பங்கேற்கத் தேவையில்லை. மத்திய அரசு.

❒ இணைய பேரழிவை ஏற்படுத்தக்கூடிய மற்றொரு சூரியப் புயல் வரப்போவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

## பரிசுத்த வேதாகமத்தில் உள்ள சில கடின சொற்களுக்கு பொருள் விளக்கம்




1. அகத்தியம் – [எஸ்தர் 4:8] – கட்டாயம், அவசியம்
2. அகரதமான – [ஏசா.14:15] – ஆழமான
3. அசங்கியம் – [எஸ்றா 9:11] – அருவருப்பபு, தூய்மையின்மை
4. அசுப்பு – [யோபு 9:23] – சடுதியாக, திடீரென வருதல்
5. அஸ்திராயுதம் – [எரே50:25] – அதிகபட்ச கோபத்தில் பிரயோகிக்கும் ஒரு கொடுமையான ஆயுதம்

*-Hariragavan*

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**

*தற்சோதனை பகுதி - 37*



### 37. தேவனைப் பார்த்தவர்கள் உண்டா?

1. தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை ☐ வசன ஆதாரம் -----------------------------------
2. நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை ஆனால் அவர் ரூபத்தைக் கண்டு இருக்கிறீர்கள் ☐ வசன ஆதாரம் ------------------
3. தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை ☐ வசன ஆதரம் --
4. தேவன் ஆவியாக இல்லை ☐ வசன ஆதாரம் ------------------
5. மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் மனுஷரில் ஒருவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறவர் ☐ வசன ஆதாரம்------------------
6. மோசே உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்று சொல்லும்போது தேவனுடைய முகத்தைக் கண்டான் ☐ வசன ஆதாரம்-
7. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் ☐ வசன ஆதாரம்-----------------------------------
8. அன்பில்லாத எவனும் தேவனை அறிவான் ☐ வசன ஆதாரம்----------
9. நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்கு புத்தியைத் தந்திருக்கிறார் ☐ வசன ஆதாரம் ---------
10. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிய முடியாது ☐ வசன ------------------


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறிந்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** Contact Us: 94435 58041

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -18**

**மூப்பர்கள் எவ்வாறு அடிக்கடி தவறாக புரிந்து கொள்ளப்படுகிறார்கள்?**

**வரைகுறிப்பு**

**1. எல்லா ஆறு பெயர்களும் ஒரு மனிதரையே குறிப்பிடுகின்றன.**
**2. எப்பொழுதுமே ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள்**
**3. ஒரு சபையிலிருக்கிற எல்லா மூப்பர்களுக்கும் சமமான அதிகாரம்**

**கலந்துரையாடல்**

**1. எல்லா ஆறுபெயர்களும் ஒரு மனிதரையே குறிப்பிடுகின்றன:** மூப்பர்களைக் குறித்த பாடத்தில் அநேகம் தவறான புரிந்து கொள்ளுதல்கள் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. மூப்பர்களுக்கான ஆறு பெயர்களும் ஒரே மனிதரையே குறிப்பிடுகின்றன என்பதை புரிந்து கொள்ளும்பொழுது ஒரு தவறான புரிந்துகொள்ளுதல் மேற் கொள்ளப்படுகிறது. நாமகரண சபைகளிலே மூப்பர்களாக இருக்கிறவர்கள் ஆயர்களில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். இன்னும் கண்காணிகளாய் இருக்கிறவர்கள் பல்வேறு அலுவலர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் 17 வது பாடத்திலே போதிக்கப்பட்டிருக்கிற ஆறு பெயர்களும் உண்மையிலேயே ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு பெயர்கள் கொண்ட மூன்று குழுக்களாக இருக்கின்றன "மூப்பர்கள்" மற்றும் "மூப்பராகிய சங்கத்தார்" என்ற இரண்டு பதங்களும் "வயது முதிர்ந்தவர்கள்" என்ற பொருள் உடையவைகளாக இருக்கின்றன. "மேற்பார்வையாளர்கள்" மற்றும் "கண்காணிகள்" என்னும் இரண்டு வார்த்தைகளும் "கண்காணிப்பாளர்கள்" என்ற பொருள் உடையவைகளாக இருக்கின்றன. "மேய்ப்பர்கள்" மற்றும் "ஆயர்கள்" என்ற இரண்டு பதங்களும் "ஆடுகளை போஷிக்கிறவர்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றன. இவ்விதமாக இருக்கிற வார்த்தைகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து எவ்வாறு ஒரே விதமான மனுஷரைக் குறித்து பேசுகின்றன என்பதை உற்று நோக்குங்கள். அப்.20:27ல் எபேசுவிலிருந்து வந்த அலுவலர்கள் "மூப்பர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் வசனம் 28 இந்த மனுஷரை "கண்காணிகள்" என்று அழைக்கிறதினாலே "மந்தைக்கு" மேலாக இருக்கிறவர்கள் என்று குறிப்பிடுகிறது இது அவர்களை மேய்ப்பர்கள் அல்லது ஆயர்கள் ஆக்குகிறது ஆகையால் மூப்பர்கள் (மூப்பராகிய சங்கத்தார்) மேற்பார்வையாளர்கள் (கண்காணிகள்) மற்றும் மேய்ப்பர்கள் (ஆயர்கள்) என்றும் அழைக்கப்பட்டார்கள். இவைகள் வித்தியாசமான அலுவல்கள் அல்ல, ஆனால் ஒரே அலுவலுக்கான வித்தியாசமான வார்த்தைகளாக இருக்கின்றன. மூப்பர்களுக்கான எல்லா ஆறு பெயர்களுமே ஒரே விதமான மனுஷரையே குறிப்பிடுகின்றன என்பதற்கான மற்றொரு வசனப் பகுதி 1பேது.5:1 "மூப்பருக்கு" என்று பேசுகிறது வசனம் 2 சொல்கிறது இந்த மூப்பர்கள் மந்தையை "மேய்க்க வேண்டும்" என்று அவர்களை மேற்பார்வையாளர்கள் ஆக்குகிறது. மூப்பர்கள், மூப்பராகிய சங்கத்தார், மேற்பார்வையாளர்கள், கண்காணிகள், மேய்ப்பர்கள் மற்றும் ஆயர்கள் வித்தியாசமான அலுவலர்கள் அல்ல. இவைகள் கர்த்தருடைய சபையிலே ஆளுகையில் இருக்கிற ஒரே விதமான அலுவலர்களுக்கான ஆறு பெயர்கள் ஆக மாத்திரமே இருக்கின்றன.